எதிர்ப்பால் அழியாதது நம் லட்சியம்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆவணி 31வ வியாழன் (16—9—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: புரட்டாசி 1வ வெள்ளி (17—9—54) | இதழ்: 81

ஒப்பந்தத்தைக் கிழித்து எறியுங்கள்

டட்லி சேனநாயகாவின் ஆவேசப் பேச்சு

கொத்தலாவலை நேருவுடன் தொடர்பு கொள்கிறார்

நிலைமை மோசமாகிய பின்னர் சென்னை சர்க்காரின் சுறுசுறுப்பு!

கொழும்பு, செப். 15—

இலங்கையின் முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயகா, இந்தியா—இலங்கை ஒப்பந்தத்தால் பலன் எதும் கிடையாதென்றும், அதைக் கிழித்து எறியவேண்டுமென்றும் கூறியதாகத் தெரிகிறது.

ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் முறை ஒருதலைப் பட்சமாக இருக்கிறது என்றும், இலங்கை மட்டும், இந்தியர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பங்களைக் கவனிக்கும்போது, இந்தியத் தூதவர் இந்தியர்கள் பலரை இந்தியர்களாகப் பதிவு செய்யாதிருக்கும்படி தடை செய்கிறார் என்றும் குற்றம் சாட்டினர்.

இலங்கை—இந்தியர் பிரச்சினை பற்றி நடைபெற்ற மகாநாட்டில் சேனநாயகாவும் கலந்து கொண்டார் என்று தெரிகிறது.

அந்த மகாநாட்டின் நடவடிக்கைகள் குறித்து தனது கருத்தைத் தெரிவிக்கும்போது தான் அவர் இவ்வாறு கூறியதாகத் தெரிகிறது.

இப்பிரச்சினை பற்றி, சேனநாயகா, ஆளும் கட்சிக் கூட்டத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

இந்தியத் தூதுவர் தேசாய் ஒப்பந்தத்தை சரிவர அமுல் நடத்தவில்லை என்றும், இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்ய விரும்புவோர் பலரை அவ்வாறு பதிவு செய்யாதவாறு தடுத்து நிறுத்துகிறார் என்றும் நேற்றைய மாநாட்டில் பிரச்சினை கிளம்பியதாம்.

தேசாயின் எதிர்ப்பின் பேரில் இது குறிப்பிடப்பட வில்லையென்று தெரிகிறது.

★

பிரதமர் திட்டம்

இலங்கைப்பிரதமர் கொத்தலாவலை, பண்டித நேருவுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, சீர்குலைந்து வரும் இலங்கை—இந்தியர் உறவை சரிப்படுத்த முயற்சிப்பார் என்று தெரிகிறது.

நாடற்றவர்கள் பிரச்சினையில் இலங்கை ஆளும் கட்சியினருக்குள்ளேயே பிளவு ஏற்பட்டுவிடும் அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

சேனநாயகா ஒப்பந்தத்தைக் கிழித்து எறிய வேண்டும் என்று கூறும் நிலை பிறக்கவுடன், கொத்தலாவலை இதற்கு உடனே பரிகாரம் காண வேண்டுமென்று நினைக்கிறார் என்று தெரிகிறது.

இலங்கை-இந்தியர் ஒப்பந்தத்தை, முன்பெல்லாம் இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சியினரும், இலங்கை ஜனநாயகக் காங்கிரசும் தான் கண்டித்தன. ஆனால், இப்போது ஆளுங் கட்சியினர் எதிர்க்கும் நிலை ஏற்பட்டு ஒப்பந்தத்தை ரத்து செய்யும் அளவுக்கு சர்க்காரை அச்சுறுத்தும் நிலை ஏற்பட்டுவிட்டதாம்,

★

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றித் தொண்டமான் பேசுகையில், டில்லியிலும், கொழும்பிலும் நடைபெற்ற மாநாடுகளில், இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் பிரதிநிதிகள் தவிர மற்றோர் அழைக்கப்பட்டது வருந்தத்தக்கது என்றார்.

இலங்கை சர்க்கார், ஏற்கனவே ஒப்பந்தத்தைக் கிழித்தெறியும் வகையில் நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்றும், இப்போது சேனநாயகாவின் கூற்றுக்கு அவசியமே இல்லையென்றும் குறிப்பிட்டார்.

★

சென்னை சர்க்கார் சுறுசுறுப்பு!

சென்னை, செப். 15—

தற்காலிக பெர்மிட்டுகள் காலாவதியாகும் 70 ஆயிரம் பேர்களை மட்டுமில்லாமல், இந்திய 'பாஸ்போர்ட்டு'கள் வைத்திருக்கும் ஒன்றரை இலட்சம் பேர்களையுமே வெளியேற்றிவிட வேண்டுமென இலங்கை சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. இந்தச் செய்தியைக் கேட்ட சென்னை சர்க்கார் பெரிதும் ஆச்சரியமடைந்து விட்டார்களாம்!

இந்த அளவில் போனால், அவர்களது தொகை நவு இலட்சத்திற்கும் அதிகமாகிவிடலாம் என்று கருதப்படுகிறது.

பிற நாட்டவர் விஷயத்தில், இலங்கை சர்க்கார் நடந்துகொள்ளும் விதத்தைப்பற்றிப் பெரும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இது, 'இலங்கை சர்க்காரின் விசித்திர சிருஷ்டி,' என்றும், உலகின் வேறெந்த பகுதிகளிலும் நடைபெறாத ஒரு செயல் என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

இலங்கையிலிருந்து, விரைவில் வெளியேற்றப்படவிருக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

டில்லி அரசாங்க அலுவலகத்தில்......

100 தாழ்த்தப்பட்டோருக்கு அலுவல்

புதுடில்லி, செப். 15—

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 100 பட்டதாரிகளை, இந்திய அரசாங்க மத்திய 'செக்ரட்டேரியட்'டில், நிரந்தர அலுவலாளர்களாக இந்த ஆண்டில் நியமிப்பது என்று முடிவு செய்திருப்பதாக, மக்கள் சபையில் உதவி உள்நாட்டு மந்திரி அறிவித்தார்.

ஒன்றுபட்டு உழைப்போம்

புதியதோர் நாடு காண்போம்

சீனப் பாராளுமன்ற துவக்க விழாவில் மா-சே-துங் வேண்டுகோள்

சீனாவின் சரித்திரத்தில் ஒரு புது அத்தியாயம்

மனித சமுதாய முன்னேற்றத்திற்கு உழைக்க உறுதி

சோஷலிச குடியரசு அமைக்க சீனர்களுக்கு அழைப்பு

ஹாங்காங், செப். 15—

"இந்த நாட்டு மக்கள் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்; இப்போது கலாச்சாரத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் பின்னடைந்துபோயிருக்கும் நமது நாட்டை அடுத்து நிறைவேற்றப்பட இருக்கும் பல ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் தொழில் வளம் உள்ளதாக, வலிமை மிக்கதாக, புதிய கலாச்சார நாடாக உயர்த்துவதற்குத் தயாராக இருக்க வேண்டும்."

"நமது குறிக்கோள் நேர்மையானது; நமது நாட்டை ஒரு உயர்தரமான சோஷலிசக் குடியரசாக்குவதில் ஏற்படுகிற இடையூறுகள் அனைத்தையும் நாம் கடந்து செல்வோம் என்ற நம்பிக்கை நமக்குண்டு; ஏனெனில், நம் லட்சியம் எதிர்ப்பால் அழியாதது,"—என்று, சீனாவின் புதிய பாராளுமன்றத்தைத் துவக்கி வைத்து, சீன மக்களின் தலைவரான மா-சே-துங், பேசும்போது குறிப்பிட்டார்.

சீனாவை ஒரு புதிய தொழில் நாடாக அமைப்பதில் பெருந்தன்மையுடனும், கண்ணியத்துடனும், நடந்து கொள்ளுமாறு சீன மக்களை மா-சே-துங் கேட்டுக்கொண்டார்.

சீனாவின் சரித்திரத்தில் இது போன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் கூடுவது இதுவே முதல் தடவையாகும்.

"சீன மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பது, மற்ற நாடுகளின் நட்பைச் சேகரிப்பது, சோஷலிச சமாதானத்தை அமைப்பது, உலக நாடுகளிடையே சமாதானம் நிலவச் செய்து, மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு உழைப்பது—இவைகளே நமது பணியாகும்," என்று மா-சே-துங் கூறினர்,

"இக்கூட்டமானது, 1949-ல் அமைக்கப்பட்டு பாதுகாத்து வருகிற சீனக் குடியரசின் வெற்றியில் ஒரு பகுதியாகும்," என்று அவர் மேலும் கூறினர்.

இந்த ஆரம்ப விழாக் கூட்டத்தில் 1000-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள் என்று தெரிகிறது.

தமிழர் மீது நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகம்

— (:) —

பொது விசாரணை நடைபெறும்?

பட்டம் தாணுவின் அறிவிப்பு

புதுடில்லி, செப். 15—

திருவாங்கூர்—கோச்சியில் தமிழர்கள் மீது பட்டம் தாணுவின் சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது பற்றி, பொது நீதிமன்ற விசாரணை ஒன்று நடத்தப்படலாம் என்று தெரிகிறது,

இரண்டு நாட்களாக டில்லியில் பட்டம் தாணுப்பிள்ளை ஜனாதிபதி, பண்டித நேரு, மற்றும் இந்திய சர்க்கார் அமைச்சர்கள் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர், அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பண்டித நேருவை பட்டம் தாணு அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியுள்ளார்.

அவர், உள்நாட்டமைச்சர் கட்ஜூவையும் சந்தித்து திரு—கொச்சியின் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிப் பேசினார் என்று தெரிகிறது.

இப்பேச்சுவார்த்தைகள் மூலம் திரு—கொச்சிக்கு இரண்டு கோடி ரூபாய் கடனாகவும், சுமார் 40 இலட்சம் ரூபாய்கள் மானியமாகவும் மத்திய சர்க்காரிடமிருந்து கிடைக்குமாம்!

டிட்டோ:

இந்தியா வருவார்

புதுடில்லி, செப். 15—

யுகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ இந்திய சர்க்காரின் அழைப்பின் பேரில் இந்தியா வருவார் என்று தெரிகிறது.

வருகிற மார்கழியில் அவர் வரலாம் என்று நம்பப்படுகிறது.

பர்மாவுக்கும் டிட்டோ செல்லக் கூடும்.

செலவு கணக்கில் எழுதினர்களாம்!

காங்கிரஸ் சர்க்காரின் சாதனை!

புதுடில்லி, செப். 15—

பேரூர் அணைக்கட்டு கட்டுவது பற்றி ஹிந்த் கட்டேன் அண்டு கம்பெனிக்கு அதிகப்படியாகக் கொடுக்கப்பட்ட பணம் ஒரு கோடியே 64 லட்சம் ரூபாய் ஆகும்; இந்த நஷ்டத்தை, இந்திய சர்க்கார் செலவு கணக்கில் எழுதி முடித்துவிட்டார்கள் என்று தெரிகிறது.

இந்த விவகாரம் சம்பந்தமாக எஞ்சினியர்கள் எவரையும் உத்தரவாதமாக்க சாத்தியமில்லாது போய்விட்டதாகவும், அவர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே வேலையில் இருந்து விலகிவிட்டதாகவும், கண்ட்ராக்டரிடமிருந்து ஏராளமான பணம் வசூலிக்க முடியுமா என்று முயற்சி செய்யப்படுவதாகவும் டில்லி மேல் சபையில் துணை அமைச்சர் ஜே என். ஹாத்தி கூறியுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 16—9—54 வியாழன்

கைவிடப்படவில்லை!

"நானு தோற்றேன்; மீசையில் மண் ஒட்டவில்லையே!"—என்று, வீராப்புப் பேசினானும், குஸ்திச் சண்டையில் குப்புற விழுந்த பயில்வான்!

ஈரோட்டிலே நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் பேசியிருப்பதைப் படித்தால், குஸ்தி பயில்வான்கள் மாத்திரமில்லை—அரசியல் பயில்வான்களும் நாட்டிலே நிறைய இருக்கிறனர் என்பது விளங்கும்.

தமிழக அரசியலில் தான் தோன்றித்தனத்துக்கும் பேர் போன ஆச்சாரியார் பதவியேற்ற காலத்திலே, அவருக்கு உறுதுணையாக அழைத்து வரப்பட்ட ஆழ்வாராதிகளின் ஒருவர்-கொங்கு நாட்டு வீரர் சுப்பிரமணியம்!

ஆச்சாரியாரின் ஆதிக்க எண்ணம், அக்கிரகாரவாசிகளுக்கு ஆனந்த வாழ்வளிக்கும் புதிய கல்வித் திட்டத்தை இந்நாட்டிலே புகுத்தியது;—திராவிடம் ஏமாற்றமடைவதைக் கண்டு சும்மா இருக்கவில்லை, தி. மு. கழகம்!

புதிய கல்வித் திட்டம் நாட்டிற்கு அளிக்கக்கூடிய எண்ணற்ற கேடுகளை எடுத்து விளக்கியது!

ஆச்சாரியாரின் அந்தரங்க எண்ணத்தையும், அவர்தம் பரம்பரையினர் வாழ புதிய திட்டம் அமுலுக்கு வருவதையும் நாட்டு மக்களுக்கு விளக்கிக் கூறியது!

உணர்ச்சி வசப்பட்ட மக்கள் வீறுகொண்டெழுந்தனர்!

வீம்பு கொண்ட ஆச்சாரியாருக்கும் புத்திபுகட்ட ஆரம்பித்தது தமிழகம்!

தி. மு. கழகத்தின் அறப்போர் துவங்கியது!

ஓராண்டுக்கு முன், கழக முன்னணி வீரர்கள் வரலாறு இட்டனர்!

தமிழக வரலாற்றிலே தனி பாணதோர் அறப் போராட்டம் நடத்தப்பட்டது!

'தகுந்த கல்வி முறை தேவை'—என்று, உலகத்திலேயே, இதுவரை எந்த நாட்டிலும் இப்படிப்பட்ட போராட்டம் நடைபெற்றதில்லை!

ஐயாயிரவர்களுக்கு மேல் சிறை சென்றனர்! நூற்றுக்கணக்கானவர் தடியடி தாங்கினர்! ஆறு பிணங்கள் பலியிடப்பட்டன!

செருக்கோடு ஆட்சி பீடமேறிய பட்டர், சொல்லாமல் வெளியேறும் நிலைமை வந்தது!

தமிழரை அம்புக்கிழுத்த காரணத்தால், அவருக்கு மிஞ்சியது, 'பாரத ரத்னா' தான்!

புதிய பிரதமர், ஆச்சாரியார் செய்த தவறைச் செய்து, புலி வாயில் மாட்டிக்கொள்ள விரும்பவில்லை!

மக்களின் மனோபாவத்தை உணர்ந்து, காங்கிரசிற்கு வலு தேடும் வழியில் செல்ல மறந்து நாட்டில் புகுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத்தை ரத்து செய்தார்!

அதற்காக, நாடு, அவரைப் பாராட்டிற்று; நன்றி தெரிவித்தனர், மனித குணம் படைத்தோர்!

இந்த நிலையில், "நாட்டிலே புகுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத்தை நாங்கள் கைவிட்டு விடவில்லை; ஒத்தி வைத்திருக்கிறோம்!" என்று கூறுகிறார், நமது நிதியமைச்சர்!

புதிய கல்வித் திட்டத்திலே அவருக்கிருக்கும் பாசம், எந்த அளவு என்பது புரியவில்லை!

இந்த இரண்டாண்டு காலத்தான் அவருக்கு இதில் ஆசையோ, அல்லது அவரும் ஆச்சாரியாரைப் போல சிறு வயதிலிருந்தே இந்தத் திட்டத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாரோ தெரியாது; ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயமாகத் தெரிகிறது, வெறும் சுப்பிரமணியம், எந்தக் கல்வித் திட்டத்தையும் பற்றிப் பேசி நாம் கேட்டதில்லை; நிதி அமைச்சரான பின்னர் தான், சுப்பிரமணியம், அளவுக்கு அதிகமான அக்கரை போட்டு, கல்வி சீர்திருத்தத்தில் இறங்கி இருக்கிறார்!

கல்வி அமைச்சர் என்ற முறையில், சுப்பிரமணியம், கல்வி சீர்திருத்தத்தில் அக்கரை கொள்ள வேண்டியது தான்; நாட்டிற்கு நல்லது எது என்று தேடிப் பிடித்துக் கொண்டு சேர்க்க வேண்டியது தான்; ஆனால், இப்படிப்பட்ட நல்ல காரியம் செய்யவேண்டிய நேரத்திலே, ஆச்சாரியாரின் ஆபத்தான திட்டம் பேசப்படுவது ஏன்?

தனக்கு அரசியல் வாழ்வளித்த ஆச்சாரியாரை, 'மறப்பது தவறு' என்று கருதுகிறாரா, அமைச்சர்!

இல்லையேல், தான் சேவை செய்து வந்த மூப்பரினைத் தோற்கடித்து விட்டு, காமராசர், பதவிக்கு வந்தது மாத்திரமில்லை; கல்வித் திட்டத்தை எடுத்து விட்டு நாடெங்கும் பாராட்டுதலையும் பெற்று வருகிறாரே என்ற கோபமா? என்ன காரணமோ, நாமறியோம், நிதி மந்திரியாரின் போக்கிற்கு!

ஆச்சாரியாரின் குலதர்ம கல்வித் திட்டம், எந்த அமைச்சரையும் கட்டுப்படுத்தவில்லை. ஆச்சாரியாரே, அந்தத் திட்டம் தன்னுடையதென்று பெருமையாகக் கூறிக் கொண்டார்.

அப்படியிருக்க, இந்த ஆழ்வாராதிகள் விலகி நின்றிருக்கலாம்; மக்கள் புத்தி புகட்டுவர், மண்டைக் கனத்தவர்களுக்கு! அதை விட்டு, நாடு சுற்றி ஆச்சாரியாருக்குத் தாளம் போட்டனர்!

புதிய கல்வித் திட்டம் சரியென்று பட்டது தனக்கென, கொங்கு நாட்டுக்காரர் இப்படிச் சிறிய யோசிக்கிறாரோ—என்று எண்ணினோம்; அது, அரசியல்வாதிக்கு அழகு!

ஆனால் அதே நிதியமைச்சர் ஆச்சாரியாரின் ஆட்சி ஒழிந்தவுடன் வீட்டுக்குப் போய்விடவில்லை!

கல்வித் திட்டம் ஒன்றின் பேரில் தான், ஆச்சாரியாருக்கும் பிரிவு உபசாரப் பத்திரம் கொடுக்கப்பட்டது! புதிய மந்திரி சபை தோன்றியது!

நமது நிதி மந்திரியாரோ, கல்வியைப் பற்றியே மறந்து விட்டு, அதிகாரத்தின் இடம் பிடிக்க ஆரம்பித்தார்; இடம் பிடித்தவுடன், கொஞ்சங்கூட அரசியல் நாணயமின்றி, அவரே, புதிய கல்வித் திட்டத்தை ரத்து செய்தார்!

இப்பொழுது, மறுபடியும் அந்தத் திட்டத்திற்கே உயிரளிக்க ஆசைப்படுகிறார்!

பாவம்! நிதியமைச்சருக்கு அவருடைய பரிதாப நிலை புரியவில்லை!

புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தது ஆச்சாரியார்! எடுத்தது காமராசர்!! இப்படிப்பட்ட மாறுதல் ஏற்படக் காரணமாயிருந்தது, தி. மு. கழகத்தின் அறப்போர்!!!

இவைகளை உணராமல், தனக்கும் பதவி கிடைத்தால் போதுமென்று ஓடுபவர்கள், 'புதிய கல்வித் திட்டம் கைவிடப்படவில்லை,' என்றுகூறுவதைத் தவிர வேறென்ன செய்வர்!

கல்வி சீர்திருத்தக் கமிட்டி, புதிய கல்வித் திட்டத்தை அமுலாக்க முயற்சிக்கும் என்று கனவு காண்கிறார் சுப்பிரமணியம்! அவர் வெறும் சுப்பிரமணியமல்ல; கல்வி, நிதி அமைச்சர்!

ஆகவே, ஒருவேளை, சென்னை அரசாங்கம், மறுபடியும் இந்தக் குலதர்மக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வரத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கவும் இருக்கலாம்; அப்படி நிலைமைகள் வளருமானால், அதைப் பார்த்துக்கொண்டு மக்களும் சும்மா இருக்கமாட்டார்கள்!

புதிய கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்ததின் பலன், ஆச்சாரியார், அதிகாரத்தை விட்டு அவசரமாக ஓட வேண்டியிருந்தது!

அவர் செய்த தவறைத் திருத்திய காமராசர், பாராட்டுதலைப் பெற்றார்.

சுப்பிரமணியனாரின் யோசனையைக் கேட்டு, மறுபடியும் இந்தத் திட்டம் புகுத்தப்படுமானால், விழிப்புற்ற மக்கள் வாளாயிருக்க மாட்டார்கள்! சீறி யெழுவர், சிறுமதியாளர்களை எதிர்த்து!

ஆம்! ஒன்றை மாத்திரம் நிச்சயம் மறந்துவிடக் கூடாது!

'குலதர்மக் கல்வித் திட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, கைவிடப்படவில்லை,' என்று கூறும் நிதி அமைச்சரும், மற்ற தேசியத் தோழர்களும், மறந்துவிடவேண்டாம் — நாட்டு மக்களின் நலனில் அக்கரைகொண்டோர் எவரும் அறப்போராட்டத்தில் நம்பிக்கையை இழந்துவிடவில்லை-என்பதை! அவர்களும், தங்கள் அறப்போர் திட்டத்தை ஒத்திவைத்திருக்கின்றனர்!

மறுபடியும் அக்கிரமத் திட்டம் தலைகாட்டுமானால், அதை ஒழித்துக்கட்ட, அறப்போர் துவங்குவர்!

இதை, நிதி அமைச்சரும், அவருக்கு இடமளித்திருக்கும் அரசாங்கமும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்!

மீண்டும் கூறுகிறோம்—"அறப் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, கைவிடப்படவில்லை"—என்று!

எதிர்பார்க்கலாமா?

சென்ற சில நாட்களுக்கு முன்னர். ஒரிசா சட்டசபையில், ஒரிய மொழியை அரசாங்க மொழியாக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

தாய் மொழியில் தங்கள் அரசாங்க அலுவல்கள் நடைபெற வேண்டுமென்று ஒரிசாவில் வாழ்கிற மக்கள் கருதினார்கள். அவர்கள் விருப்பம் இன்று, அங்கே சட்டமாகிவிட்டது!

ஒரியா, அரசாங்க மொழியாக வேண்டும் என்ற தீர்மானத்தின் மீது பேசிய உறுப்பினர்கள் பலர், 'ஒரியா உயர்ந்த மொழி அல்ல; அரசாங்க அலுவல்களை நடத்துவதற்குத் தகுதிவாய்ந்த மொழியல்ல,' என்று கூறி, அத்தீர்மானத்தை எதிர்க்கவில்லை.

'ஒரியா, ஒரு மிகவும் உயர்தரமான மொழியல்ல; அந்த மொழியில் சிறந்த டைப்ரைட்டர்கள் இல்லை; சர்க்கார் இலாகாக்களில் காணப்படும் சொற்களை ஒரியாவில் மொழி பெயர்ப்பதில் பெரும் அளவில் கருத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது,' என்பதை எல்லாம் அங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்,

ஆனால், விவாதத்தின் இறுதியில் பேசிய ஒரிசா முதல் அமைச்சர், ஒரியாவை அரசாங்க மொழியாக்குவதில் பல இடையூறுகள் இருக்கின்றனவென்று, அவைகளைச் சமாளிக்க சர்க்கார் தயாராக இருப்பதாகவும், இப்பிரச்சினையை இனியும் ஒத்திப்போடுவது கூடாது என்றும் பேசினார் என்று தெரிகிறது.

அவரது பேச்சிலே நம்பிக்கைத் தொனி காணப்படுகிறது! அது, பாராட்டப்பட வேண்டியதாகும்! தாய் மொழியின்மீது அன்புகொண்டோரிடம் கட்டாயம் காணப்படவேண்டிய—இருக்க வேண்டிய நம்பிக்கையாகும்!

தொல்லைகள் இருக்கின்றன என்பதற்காகத் தாய் மொழியை அரசாங்க மொழியாக்குவதில் தாமதம் செய்வது கூடாது என்பது ஒரிசா முதல் அமைச்சரின் கருத்தாகும்.

அவர்களிடத்திலே காணப்படும் இந்த நல்ல நம்பிக்கை, சென்னை மாநில ஆட்சி பீடத்தில் இருப்போரிடையே காணப்பட்டால், தமிழ் ஆட்சி பீடமேற வழியிருக்கிறது.

இப்போதெல்லாம், ஆட்சியில் இருப்போரும், அவர்களை ஆதரிக்கும் காங்கிரஸ் இயக்கத் தூண்கள் எனப்படுவோரும் 'ஆங்கிலம் கூடாது' என்று பேசுவதில் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்!

வடநாட்டு இந்தி மொழியை—எவ்விதமான தகுதியும் இல்லாத அந்த மொழியை உள்ளே நுழைக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள்!

தாய் மொழியான தமிழ் ஆட்சிபீடமேற வேண்டும் என்பதில் அவர்களுக்கு நல்ல நம்பிக்கை இருந்தபோதிலும், தமிழ் மொழி இன்று ஆட்சிபீடமேறியிருக்கும்!

காங்கிரசை ஆதரிப்பவராகச் சொல்லுவோரில் பலர், தமிழ் மொழியை, 'அரசாங்க மொழி பதவிக்கு வேண்டிய தகுதி இல்லாத மொழி,' என்று சில நேரங்களில் பேசுகிறார்கள்!

'சட்டசபை நடவடிக்கைகளை இப்போதே தமிழில் நடத்தலாம்,' என்பது, விந்தையாக இருக்கிறதாம்; தேசிய இதழ் ஒன்று இப்படி எழுதியிருக்கிறது!

'திருச்சி மாவட்டத்தில், நிர்வாகத்தைத் தமிழில் நடத்துவதில் ஏற்பட்ட அனுபவம், அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை,'—இதுவும் அந்தத் தேசிய இதழின் கருத்துதான்!

தமிழிலே சட்டப் புத்தகங்கள் இல்லை; நிர்வாக அகராதி இல்லை — என்றெல்லாம் காரணங்களைக் காட்டி, தேசியத்தார் பலர், தமிழ் மொழி ஆட்சிபீடமேறுவதைத் தடை செய்ய எண்ணுகிறார்கள்!

ஆட்சி பீடத்திலிருப்போரிடையே காணப்படும் இந்த மனப்பான்மை, கண்டிக்கத் தக்கதாகும்.

சட்டசபையில் மட்டுமல்ல-நிர்வாக இயந்திரத்திற்குள்ளேயும் நுழைந்து, வெற்றிநடை போடும் அளவுக்குத் தகுதி பெற்றது தமிழ் மொழி!

இப்போது சென்னை முதல் அமைச்சராக இருக்கும் கனம் காமராசர், தமிழ் மொழியின் மீதும், தமிழர்கள் மீதும் அன்புகொண்டவர் என்று கூறப்படுகிறது. 'தமிழ்ப் பண்பாடுகளைக் காப்பாற்றுவேன்,' என்று, அவரும் அடிக்கடி பேசுகிறார்!

ஆகவே, இவரது ஆட்சியில், தமிழ், ஆட்சி மொழியாகும் என்று நினைத்தால், அது தவறல்ல என்று கூறலாம்.

தமிழை ஆட்சி மொழியாக்கிய பெருமை கனம் காமராசருக்குச் சேருமென்று பலர் எதிர்பார்க்கிறார்கள்.

இவரது ஆட்சியிலாவது தமிழ் மொழி ஆட்சி மொழியாகும் என்று எதிர்பார்க்கலாமா?

அறுவை வைத்தியத்தில் முன்னேற்றம்

லண்டன், செப். 16—

ஒரு பிரிட்டிஷ் அறுவை வைத்திய நிபுணர், நோயாளி ஒருவரின் இருதயத்தின் உள்ள, பலவீனத் தமனிகளை உடைய மிகப் பெரிய இரத்தநாளத்தில் 14 செண்டி மீட்டர் நீளம் எடுத்துவிட்டு, இறந்துபட்ட ஒருவரின் இருதய இரத்த நாளத்தோடு சேர்த்து சிகிச்சை செய்து வெற்றி கண்டிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

இதுவரை இத்துறையில் செய்யப்பட்ட சிகிச்சையில் இதுவே மிகப் பெரிய முயற்சி என்றும் நம்பப்படுகிறதாம்.

இம்முறையான அறுவை வைத்தியத்தில் அமெரிக்க மருத்துவர்கள், [illegible] அதிகமான திறமையுடையவர்களாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. அவர்களை எல்லாம்விட இந்த பிரிட்டிஷ் மருத்துவரின் முயற்சி மிகக் கடினமானது [illegible].

இந்த மிகச் சிறப்பும், சிரமமும் மிகுந்த சிகிச்சை பிரிட்டனில் உள்ள செயிண்ட் மேரி மருத்துவ மனையில் நடத்தப்பட்டதாம்.

அமெரிக்க ஜனநாயகம் அறைகூவப்படுகிறது!

நிற வேற்றுமையை நீக்க எந்தச் சக்தியாலும் இயலாதாம்!

உயர் நீதிமன்றத்தின் முடிவுக்கு உலை

நீக்ரோவருடன் சேர்ந்து படிக்க வெள்ளையர் மறுப்பு

பல மாணவர்கள் வேலை நிறுத்தம்

நியூயார்க், செப். 16—

"நீக்ரோ, குழந்தைகளுடன் சேர்ந்து பள்ளிகளில் ஒன்றாகப் படிக்க மாட்டோம்," என்று மேற்கு வர்ஜினியாவிலுள்ள 500 மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனராம்!

அமெரிக்க தெற்கு ராஜ்யங்களில் ஒன்றான மேற்கு வர்ஜினியாவில், முன்பு, வெள்ளைக் குழந்தைகளுக்கும், நீக்ரோ குழந்தைகளுக்கும் தனித்தனியான பள்ளிகள் இருந்தன.

சில மாதங்களுக்குமுன் அமெரிக்க உயர்நீதிமன்றம், நீக்ரோ குழந்தைகளைப் பிரித்து வைப்பது அமெரிக்க அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று தீர்ப்பளித்திருந்ததல்லவா? அதையொட்டி, தனித்தனியான பள்ளிக்கூடங்கள் போய், வெள்ளையரும் நீக்ரோவரும் ஒன்றாகப் படிக்கும் பள்ளிகள் திறக்கப்பட்டன.

'அப்பள்ளிகளில் படிக்க மாட்டோம்' என்று வெள்ளை மாணவர்கள் பள்ளி செல்லவில்லையாம்!

ஜியார்ஜியா ராஜ்யத்தின் கவர்னரான தல்—மாட்பீ என்பவர், 'தனது ராஜ்ய அதிகாரிகளே, வெள்ளை—நீக்ரோ குழந்தைகள் ஒன்றாகவேதான் கல்வி பயில வேண்டும்,' என்று 'எந்தச் சக்தி'யாலும் கட்டாயப்படுத்த முடியாது என்று கூறியிருப்பதாகத் தெரிகிறது.

நிச்மண்ட் ராஜ்ய கவர்னர் ஸ்டான்லி என்பவர், "நிற வேற்றுமையை நீடிக்க, தன்னிடமுள்ள எல்லா சட்டரீதியான அதிகாரங்களையும் உபயோகிப்பது என்று முடிவு செய்திருப்பதாக"வும் செய்திகள் வெளிவந்துள்ளன.

எப்படி, நடைமுறையில், வெள்ளை மாணவர்களையும், நீக்ரோ குழந்தைகளையும் ஒன்றாக இணைத்துப் பள்ளி நடத்துவது என்பது பற்றி மற்றொரு உத்திரவை உயர்நீதிமன்றம் தருகிற வரையில், இந்த நிற வேற்றுமை நீக்கம் பற்றி எதுவுமே யோசிப்பதில்லை என்று பதின்மூன்று ராஜ்யங்கள் முடிவு செய்துள்ளனவாம்.

மிஸிஸிப்பியில் இந்த எதிர்ப்பு உச்சகட்டத்தை அடைந்ததாம். அங்குள்ள சர்க்கார் பள்ளிகளையே, இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கு அஞ்சி, மூடிவிட வேண்டுமென்ற பிரச்னை எழுகிறதாம்!

"நீக்ரோ குழந்தைகள் பள்ளிக்குள் நுழைந்தால், அவர்களை வெளியே அடித்து விரட்டுவோம்," என்று, சமார் 600 வெள்ளைக் குடும்பத்தினர் பள்ளி அதிகாரிகளை மிரட்டவே, அதிகாரிகள், உடனே, மீண்டும் நிறவேற்றுமையைக் கடைப்பிடிக்கும்படி உத்திரவிட்டுள்ளனராம்!

இச்சம்பவம், கன்ஸாஸ்பீல்ட் என்னுமிடத்தில் உள்ள ஸ்ரீ—பிரியர் பள்ளிகளில் நடைபெற்றதாகத் தெரிகிறது.

அதே பள்ளிகள் ஒன்றில், சமார் 100 வெள்ளை மாணவர்கள், 14 நீக்ரோ மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்துள்ளனர் என்று சொல்லப்படுகிறது.

மேரிலண்ட் பகுதிகளில் உள்ள பெற்றோர்—ஆசிரியர் கூட்டுச் சங்கங்கள் ஒன்றுகூடி, மீண்டும் நிறவேற்றுமை நீடித்திருக்க என்ன செய்ய வேண்டுமென்பது பற்றி ஆலோசிக்கின்றனராம்!

வாஷிங்டன் ராஜ்யத்தில் மட்டும் நிறவேற்றுமை ஒழிந்த பள்ளிகள் அமைதியாக நடைபெற்றனவாம்!

அங்குள்ள பள்ளிகளில் நீக்ரோ மாணவருக்கு வெள்ளை ஆசிரியர்களும், வெள்ளை மாணவருக்கு நீக்ரோ ஆசிரியர்களும் சென்று பாடம் போதித்தனராம்!

கொலம்பியா மாவட்டத்தில் மட்டும் 1,06,000 குழந்தைகள் பள்ளி செல்கின்றனராம்! அவர்களில் 100-க்கு 58 பேர் நீக்ரோவர்கள் என்று தெரிகிறது.

வாஷிங்டன் நகரில் நூற்றுக்கு அதிகமானவர் மட்டுமே கலப்புப் பள்ளிகளுக்குச் சென்றனர். இதர கலப்புப்பள்ளிகளில் மாணவர் தொகை வெகுவாகக் குறைந்துபோயிருக்கிறது என்றும் அறியக்கிடக்கிறது.

ஜாப். பிரதமருக்கு 'சம்மன்!'

ஸப்பான் மானிய விஷயத்தில் ஊழல் நடந்ததாக வெளியான புகார்கள் சம்பந்தமாக சாட்சியம் கொடுக்க ஆஜராகுமாறு ஜப்பானியப் பிரதமர் யோஷிடோவுக்கு ஜப்பானிய சட்டசபையின் தணிக்கை கமிட்டி 'சம்மன்' அனுப்பியிருக்கிறது.

அதன்படி பிரதமர் ஆஜர் ஆகவில்லை என்றால், அவருக்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை விதிக்க சட்டம் இடம் கொடுக்கிறது.

உங்களுக்கு தெரியுமா?

★

1. இந்தியாவில் முதல் முதலாக ஏற்படுத்தப்பட்ட தேசிய ஆராய்ச்சிக்கூடம் எது?

(அ) புது டில்லியிலுள்ள தேசிய பௌதிக ஆராய்ச்சிக் கூடம்;

(ஆ) லக்னோவிலுள்ள மத்திய மருந்துச் சரக்குகள் ஆராய்ச்சிக் கூடம்;

(இ) பூனாவிலுள்ள தேசிய ரசாயன ஆராய்ச்சிக்கூடம்.

2. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எஞ்சியுள்ள 1½-ஆண்டு காலத்தில், எந்த விகிதத்தில் பணம் செலவிடப்படவிருக்கிறது?

(அ) நாளொன்றுக்கு 2½-கோடி ரூபாய் வீதம்;

(ஆ) வாரத்துக்கு 2½ கோடி ரூபாய் வீதம்;

(இ) மாதமொன்றுக்கு 2½-கோடி ரூபாய் வீதம்.

3. பஞ்சாயத்து போர்டுகளோ, யூனியன் போர்டுகளோ இல்லாத இடங்களில்; கிராம அபிவிருத்தி வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள பொது ஸ்தாபனத்தின் பெயர் என்ன?

(அ) கிராம விகாச மண்டலங்கள்;

(ஆ) கிராம மக்கள் சமிதிகள்;

(இ) கிராம சேவா சங்கங்கள்.

4. மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளின் சௌகரிய வசதிகளுக்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது?

(அ) 5 கோடி ரூபாய்;

(ஆ) 10 கோடி ரூபாய்;

(இ) 15 கோடி ரூபாய்.

5. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பூர்த்தியான பெரிய பாசனத் திட்டங்களின் மூலம் 1951—53-ம் ஆண்டு காலத்தில், புதிதாகப் பாசன வசதிபெற்ற நிலத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவு?

(அ) 5 லட்சம் ஏகரா;

(ஆ) 10 லட்சம் ஏகரா;

(இ) 15 லட்சம் ஏகரா.

விடைகள்: 1-(இ); 2-(அ) 3-(எல்லா விடைகளும் சரி; இப்பெயர்கள் முறையே மத்தியப் பிரதேசத்திலும், ஒரிசாவிலும், சென்னையிலும் வழங்கி வருகின்றன); 4-(இ); 5-(இ)

ரஷ்யாவை இணைக்கும் இரயில் பாதை!

சீனாவின் பிரம்மாண்டமான முயற்சி!

1350 மைல் நீளத்தில் அமைக்கப்படுகிறது!

பீகிங், செப். 15—

சீனாவின், மலைப்பாங்கான வடமேற்கு மாகாணங்களில், சாலைகளும், ரயில் பாதைகளும் சீன சர்க்காரால் அமைக்கப்பட்டு வருகின்றன.

துரிதமாக அமைக்கப்படுகிற சிங்கியாங் வழியாகச் செல்லும் 1350 மைல் நீளமுள்ள ஒரு ரயில் பாதை நிறைவுற, மத்திய ஆசியாவில் உள்ள செமிபாலடின்ஸ்க் எனும் இடத்திலிருக்கும் சோவியத் ரயில் தொடருடன் இணையும் என்று தெரிகிறது.

மிக முக்கியமான இந்த ரயில் பாதை, சோவியத் நாட்டுடன், மிக பக்குவமானதும், குறுகியதுமான போக்குவரத்துத் தொடர்பு கொள்ள ஏதுவாக அமையும் என்று தெரிகிறது.

இப்போது சோவியத்துடன் தொடர்புகொள்ள அமைந்துள்ள சாதனமான சைபீரியா, மஞ்சூரியா வழியாகச் செல்லும், ரயில் தொடர், மிக நீளமானதும், சுற்றி வளைத்துச் செல்ல வேண்டியதாகவும் உள்ளது.

மேலும் யுத்த காலங்களில் அந்தத் தொடரின் கிழக்குப் பகுதிகள் பலமான புறத் தாக்குதல்களுக்கு வேறு ஆளாகும்போது மிகவும் கஷ்டமாயிருக்குமாம்.

புதியதாக அமைக்கப்படுகிற ரயில் தொடர்பு சோவியத் யூனியனின் உள்ள ரயில் தொடரை மிகவும் குறுக்கு வழியில் இணைக்குமாம். அந்தப் புதிய ரயில் பாதை ஹாமி, உருமசி ஆகியவைகளைக் கடந்து வடமேற்கு எல்லை வழியாக சோவியத் எல்லையை எட்டிப் பிடிக்குமென்று தெரிகிறது.

சிங்கியாங்கிற்கு அப்பால் அமையும் இந்தப் புதிய ரயில் பாதை சோவியத்—சீன எல்லைகளிலிருந்து ஏராளமான பொருட் செலவில், ஏக காலத்தில் அமைக்கப்பட்டு வருகிறதாம்!

1950-ல் சீனா; ரஷ்யாவுடன் செய்துகொண்டிருக்கும் கூட்டுத் தொழில் முயற்சி ஒப்பந்தப்படியே இந்தப் பிரம்மாண்டமான ரயில் தொடர் அமைகிறதாம்.

ஆயுதங்கள் தருவார்களாம்!

வாஷிங்டன், செப். 14—

"தேசிய சீன சர்க்காருக்கு முழு ஆதரவு தரவேண்டும் என்று புதிதாக ஏதும் உத்திரவுகளை அமெரிக்கா பிறப்பிக்க வேண்டியதில்லை; ஏற்கனவே அத்தகைய ஆதரவை அமெரிக்கா அவர்களுக்குத் தந்திருக்கிறது; செஞ்சீனா கம்யூனிஸ்டுகள் தாக்கும்போது தேவையானால், அதிகமான ஆயுதங்களை, அமெரிக்கா, தேசியச் சீனர்களுக்குத் தரக்கூடும் என்று அமெரிக்க கப்பற்படை அதிகாரிகள் கருதுவதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

திருமணங்கள்

☆

3—9—54ல், நெல்லை மாவட்டம் குளத்தூரில் தோழர் பி. மாரியப்பன்—தோழியர் செல்லம்மாள் அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது — வாழ்வோரும்—நன்றியுடையது —வோழப்பாளர்.

* * *

11—9—54, காலை 9 மணிக்கு சென்னை இராயப்பேட்டையில் தோழர் கோவிந்தசாமி—தோழியர் சரோசா சீர்திருத்தத் திருமணம் தோழர் மு புரட்சிமணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். என். தென்னரசு, கண்ணதாசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இதன் நினைவாக மணமக்கள் சார்பில் ரூ 2 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு அன்பளிப்பு அளிக்கப்பட்டது—வாழ்வோரும்—நன்றியுடையது—வோழப்பாளர்.

* * *

சேர்மாதேவியில் நடைபெற்ற தோழர் எம். என். நீ பாண்டியன்—தோழியர் சிவிதாய் வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிக்கப்பட்டது—வாழ்வோரும்—நன்றியுடையது—வோழப்பாளர்.

* * *

11—9—54 காலை 8½ மணிக்கு திருவிடமருதூர் காவேரி மூலைத் தெருவில், தோழர் பி தங்கவேலு—தோழியர் லட்சுமி திருமணம், மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் தலைமையிலும்; கே. கே. நீலமேகம் முன்னிலையிலும் நடைபெற்றது. தோழர்கள் பெட்டம்மா, டி. ஏ. இராமசாமி, இராமச்சந்திரன் ஆகியோர் பேசினர்.

* * *

கெடிமங்கலம் தோழர் அப்பையன்—தோழியர் இலக்ஷ்மியம்மாள் அவர்களுக்கும் நடந்த திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பளிக்கப்பட்டது—வாழ்வோரும்—நன்றியுடையது—வோழப்பாளர்.

* * *

2—9—54ல், அக்கசெட்டிபாளையத்தில் தோழர் ஏ. கே. தங்கவேல்—தோழியர் பழனியம்மாள் சீர்திருத்தத் திருமணமும், தோழர் எம். தேவராசு—தோழியர் செல்லம்மாள் திருமணமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக ரூ. 2 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டது — வாழ்வோரும்—நன்றியுடையது—வோழப்பாளர்.

****

நெல்லை மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

18, 19—9—1954-ந் தேதிகளில், பாளையங்கோட்டை பவர் அவுஸ் எதிரில் மந்திரம் அரங்கில் நடைபெறும்

18—9—54 சனிக்கிழமை:	19—9—54 ஞாயிற்றுக்கிழமை:
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: கண்ணதாசன்	தலைவர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி
துவக்குபவர்: எம். ஜி. ராமச்சந்திரன்	துவக்குபவர்: பூங்கோதை

இரண்டு நாட்களிலும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்வர்

★

இன்னிசை விருந்து — சனி இரவு 9-30 மணிக்கு: தோழர்கள் நாகூர் அனீபா, சௌந்திரராசன், தோழியர் பி எஸ். செல்வா

'அம்மையப்பன்' — ஞாயிறு இரவு 9-30 மணிக்கு நாடகம்: தோழர்கள் எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, தோழியர் சகுந்தலா மற்றும் பலர் நடிப்பது

—வரவேற்புக் குழுவினர்

****

ஒப்பந்தத்தைக் கிழித்து....

அமெரிக்கக் கடற்படை சுறுசுறுப்பு

பசிபிக்கில் தீவிரம்

வாஷிங்டன், செப். 15—

பசிபிக்கில் அமெரிக்கா ஏராளமான போர்ப்படையைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறதாம்.

பார்மோசாவைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க ஏழாவது கடற்படையின் உதவிக்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

12 விமானம் தாங்கிக் கப்பல்கள், 10 குரூய்சர்கள், 125 நாசகாரிக் கப்பல்கள், 60 சப்மரின்கள் இப்போது பசிபிக் பிராந்தியத்தில் கொண்டுவரப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

இருந்தும், சீனக் கடற்கரையோரத்தில் நிலவுகிற நெருக்கடி நிலைமைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இப்பிராந்தியத்தில் ஏற்படும் எந்த அவசர நிலையையும் இப்படை சமாளிக்கும் என்று கூறப்படுகிறது.

கயானா பிரச்சினை

ஐ. நா.-வுக்குப் போகும்

ஜோனன் அபர்க், செப். 14—

"அடுத்த வாரம் கூடவிருக்கிற ஐ. நா. பொதுச்சபையில், பிரிட்டிஷ் கயானா பிரச்சினை எழுப்பப்படும்,"

என்று, கயானா முன்னாள் மக்கள் முன்னணிக் கட்சி அரசாங்க உள்நாட்டமைச்சர் ஜெய் நாராயண் சிங் இங்கு கூறியுள்ளார்.

கயானா பிரச்சினையை ஐ நா.-வில் எந்த நாடு எழுப்பும் என்பதைக் கூற அவர் மறுத்துவிட்டார்; ஆனால், தென் அமெரிக்க நாடுகள் இதில் அக்கறைகாட்டவேண்டுமென்று தெரிவித்தார்.

இவர், பனாமா, ஈக்வடார், வெனிசுலா முதலிய நாடுகளுக்குச் சென்று, கயானா பிரச்சினைக்கு அவைகளின் ஆதரவைத் திரட்டிவிட்டார்; உருகுவே நாட்டிற்கும் போவார் என்று தெரிகிறது.

நில அரிப்பு

நேருவுக்குத் நன்றி

திப்ரூகர், செப். 15—

பிரம்மபுத்திரா நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, அந்நதியின் இரு கரைகளையும் அரித்து, அகலப்படுத்திக் கொண்டே போகிறது. இந்த நில அரிப்பை உடனடியாகத் தடுக்க, சீனாவிலிருந்தோ அல்லது இதர வெளி நாடுகளிலிருந்தோ நிபுணர்களை அழைக்கும்படி திப்ரூகர் வழக்கறிஞர் சங்கம் நேருவுக்கும், திட்டத்துறை அமைச்சருக்கும் தந்தி கொடுத்திருக்கிறது.

பிரம்மபுத்திரா நதியின் நில அரிப்பு, இங்குள்ள இரண்டு மைல் நீள ரோட் நீதி மன்றங்களையும் விழுங்குவதற்கு நெருங்கிக் கொண்டிருப்பதால், அவை இரண்டும், முதல் வேலை செய்வதற்கு இலாயக்கற்றவை என்று அதிகாரி ஒருவர் நிருபரிடம் கூறினார்.

தேஷ்முக் கனடா செல்வார்

கொழும்புத் திட்ட ஆலோசனைக் கமிட்டியின் ஆறாவது கூட்டம் அக்டோபர் 4 முதல் 9-ம் தேதி வரை கனடா தலைநகரில் நடைபெறும். இந்திய சர்க்கார் அமைச்சர் தேஷ்முக் கலந்துகொள்வார் என்று தெரிகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியர்கள் பிரச்சினையில் சென்னை சர்க்கார் தீவிரமாகக் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது.

இது சம்பந்தமாக சென்னை சர்க்காருக்கு உத்தியோக பூர்வமாகத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லையாகிலும், வெளியேற்றப்படுபவர்கள் சென்னை மாநிலத்திற்குத்தான் வரக்கூடுமென்று ஜில்லா கலெக்டர்களை சர்க்கார் உஷார்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

வெளியேற்றப்பட இருக்கும் இலங்கை இந்தியர்களைப் பற்றி டில்லி சர்க்காருக்கு எழுதப்பட்டிருக்கிறது. அங்கிருந்து இது வரையிலும் முழு தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லையாம்!

இலங்கையிலிருந்து வருபவர்கள் பெரும்பாலும் மலையாளம், திருநெல்வேலி, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஜில்லாக்களைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். ஆகவே, அந்தந்த ஜில்லா கலெக்டர்களுக்கு விசேட உத்திரவுகள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வருபவர்கள் 'அனாதைகள்' என்று நினைக்கப்படும் அளவுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்களாம்!

இவைகளைத் தவிர, சென்னை சர்க்காருக்கு, இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டு வாவிருக்கிறவர்களுக்கு என்னென்ன உதவிகள் எந்தெந்த விதங்களில் செய்வது என்பது பற்றித் தகவல் தெரியாதாம்!

கல்கத்தா டிராம் போக்குவரத்து!

கட்டணத்தை மீண்டும் உயர்த்த யோசனையாம்!

கல்கத்தா, செப். 16—

கல்கத்தா நகரத்தில் உள்ள டிராம் போக்குவரத்துக்கான கட்டணத்தை உயர்த்துவது பற்றி மீண்டும் யோசிக்கப்படுகிறதாம்.

சென்ற ஆண்டு டிராம் கட்டணம் உயர்த்தப்பட்டதை எதிர்த்து மாதக் கணக்கில் போராட்டம் நடைபெற்றது நினைவிலிருக்கலாம்.

வெள்ளையருக்குச் சொந்தமான இந்த டிராம் கம்பெனியாரின் நிர்வாகியான டி. டி ஸவப் என்பவர், லண்டனிலிருந்து திரும்பியதும், டிராம் கட்டணத்தை உயர்த்துவது பற்றி மேற்கு வங்க அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப் படுமாம்.

எதிர்ப்பின் காரணமாக சென்ற ஆண்டு கட்டணம் உயர்த்தப்படாததினால், டிராம் போக்குவரத்தை விரிவாக்குவதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்படாது நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

கோபால ரெட்டி வேண்டுகோள்

விஜயவாடா, செப். 15—

ஆந்திரப் பிரதேச காங்கிரசின் தலைவர் கோபால ரெட்டி ஆந்திர சட்டசபையில் கம்யூனிஸ்டுகள் கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிக்க எல்லா காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும் அன்று சட்டசபைக்கு வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற விடாது தடை செய்ய மற்ற ஜனநாயகக் கட்சிகள் எல்லாம் ஒன்று சேரவேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

செம்பியம்

பெரம்பூர் குருசாமி கிராமணித் தோட்டம்

(வீனஸ் டாக்கீஸ் அருகில்)

18—9—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. கே. சாமி, எம். சி.

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

கண்ணதாசன்

★

மாங்காடு

தியாகராயர் திடலில்

18—9—54 மாலை 5½ மணிக்கு

தலைவர்: எல். எஸ். மல்லி

பேசுவோர்:

மா. மாணிக்கம்

எஸ். பி. வ. னமாமலை

திரு.வி.க. நினைவுநாளும், பாரதி விழாவும்

17—9—54 மாலை 4 மணிக்கு பெண்ணாடம், மாணவர் இலக்கிய மன்றம் கழக உயர்நிலைப் பள்ளியில், தோழர் ப. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும். பலர் சொற்பொழிவாற்றுவர்.

கலை வளர்ச்சிக் கழகம் துவக்கம்

17—9—54 வெள்ளி அன்று எண். 310, திருவொற்றியூர் பெரியசாலை, சென்னையில், திருவொற்றியூர் பகுதிவாழ் முற்போக்கு இளைஞர்களால் கலை வளர்ச்சிக் கழகம் துவக்கப்படும்.

அங்கேயும் அவதி!

எகிப்தில் வெள்ளம்

நைல் நதி பொங்கி எழுந்ததின் விளைவாக, கடந்த 50 ஆண்டுகளாய் இல்லாத மிகப் பெரும் வெள்ளப் பெருக்கு எகிப்தில் இன்று ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே கெய்ரோவின் பள்ளமான பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டனவாம். இப்போது வெள்ளம் தெற்கு நோக்கி வேகமாகப் பாவிக் கொண்டிருக்கிறதாம்.

சூடானில் பல ஆயிரக்கணக்கானவர்கள் இந்த வெள்ளக் கொடுமையினால் வீடிழந்து தவிக்கின்றனராம்.

மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள்

தூங்குவதற்கு ஏற்பாடு

புதுடில்லி, செப். 14—

இந்திய ரயில்வேக்களின் மூன்றாம் வகுப்பு முதலாக இரவு நேரங்களில் நீண்ட தூரப் பிரயாணம் செய்பவர்களுக்கு மட்டும் உறங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மூன்று பேர் கொண்ட இந்திய ரயில்வே குழு ஒன்று, ஐரோப்பிய ரயில் போக்குவரத்து வசதிகளை இரண்டு மாத காலமாகச் சுற்றிப் பார்வையிட்டு விட்டுத் திரும்பிவந்து அறிக்கை செய்த பின் பேரிலேயே இந்திய அரசாங்கம் இந்த முடிவைச் செய்திருக்கிறது.

முதன் முதலில், இந்த வசதியை நீண்ட தூரப் பிரயாணிகளுக்கு ஜனதா எக்ஸ்பிரஸ் வண்டிகளில் மட்டும் செய்வதென்றும், இதில் ஏற்படும் அனுபவத்தைக் கொண்டு, பின் எல்லா இரயில்களிலும் ஏற்பாடு செய்வதென்றும் முடிவாயிருக்கிறது.

★

முதல் வகுப்பு கிடையாது

1955-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் இந்திய ரயில்வேக்களில் முதல் வகுப்புகள் ஒழிக்கப்படும் என்று தெரிகிறது.

சென்னையில் அண்ணா பேசுகிறார்

19—9—1954 ஞாயிறன்று மாலை 6 மணிக்கு

இராயபுரம் (2-வது வட்டம்) தி. மு. கழகச் சார்பில்

மாபெரும் பொதுக்கூட்டம்

இடம்: பம்பிங் ஸ்டேஷன் தெரு (தலைமை நிலையம் அருகில்)

—2-வது வட்ட தி. மு. கழகம்

சர்க்கரை பதுக்கல்

சர்க்கார் நடவடிக்கை

புதுடில்லி, செப். 15—

தனிப்பட்ட வியாபாரிகள் ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சர்க்கரை அனுப்புவது இனி அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிகிறது.

கல்கத்தாவிலோ, பம்பாயிலோ சர்க்கரைக் கோட்டா பெறும் வியாபாரிகள், சரக்குகளை, சம்மந்தப்பட்ட தமது இடங்களிலேயே விற்பனை செய்ய வேண்டும் என்று தெரிகிறது.

ஏராளமாக சர்க்கரையைப் பதுக்கி வைத்திருக்கும் சிற்சில வியாபாரிகளிடமிருந்து சர்க்கார் கையிருப்புகளை கோரப் பெறுவார்கள் என்று தெரிகிறது.

சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றப்பட்ட 40,000 மூட்டைகள் திருப்ப சர்க்காரால் கோரிப் பெறப்படும் என்று தெரிகிறது.

இந்த சர்க்கரையை, கல்கத்தாவில், அக்கா பண்டிகையின் போது அதிக லாபத்திற்கு விற்க ஏற்பாடு நடந்ததாக உணவு அமைச்சர் கித்வாய் நிருபர்களிடம் கூறினார்.

★

மத்திய சர்க்கார் முயற்சி

இந்திய உபகண்டம் முழுமையும் சர்க்கரை தட்டுப்பாடு அநியாயமாக ஏற்படுவதைத் தடுக்க மத்திய சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்கும் என்றும், இதன் விளைவாக சர்க்கரை விநியோகத்தை சர்க்காரே ஏகபோகமாக மேற்கொள்ளும் என்றும் தெரிகிறது.

மில்கள், மொத்த வியாபாரிகளிடமுள்ள சரக்கு, இறக்குமதிச் சரக்கு உட்பட சர்க்கரை ஸ்டாக் முழுவதையும் சர்க்கார் கைப்பற்றுதல், சில்லறை வியாபாரிகளுக்கும், பொது மக்களுக்கும் சர்க்காரே நேரடியாகச் சர்க்கரை விநியோகித்தல், சர்க்கரைப் போக்குவரத்துக்குத் தீவிர கட்டுப்பாடு விதித்தல் ஆகியவைகளே மத்திய சர்க்காரின் உத்தேசத்திலுள்ள தீவிர நடவடிக்கைகளாகும்.

சர்க்கரைத் தொழில் சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து போதிய ஒத்துழைப்புக் கிடைக்காமல் போனதே, இத்தீவிர நடவடிக்கைக்குக் காரணமாம்!

அறைகுறைகளிலும், கல்கத்தா இரயில்வே இடங்களிலும், மணிக்கு 29 வீதம் வியாபாரிகளுக்குச் சப்ளை செய்யப்படுகிறது; ஆனால் வேண்டுமென்றே பற்றுக்குறை ஏற்படுத்தப் படுவதாகச் சர்க்கரை விலை ஏறியிருக்கிறது. அதோடு சர்க்கரை பதுக்கப்பட்டும் வருகின்றதாம். கல்கத்தாவிலுள்ள ஒரு நிறுவனம், 30,000 மூட்டை சர்க்கரையை பதுக்கிவைத்துக் கொண்டு, மேலும் 'தேவை'யைக் கேட்டிருக்கிறதாம்!

அதிகமான சர்க்கரை தேவைப்படும் தனி நபர்களுக்கு, ஒரு முதல் பத்து மூட்டைகள் வரை நேரடி விற்பனை செய்யவும் சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்!

மிளகாய் சாகுபடி

நடப்பு ஆண்டில், மிளகாய் சாகுபடி விஸ்தீரணம் 13,26,000 ஏகராவும், உற்பத்தி 3,10,000 டன் அளவாக இருக்குமென்று தெரியவருகிறது.

சென்னை இராஜ்ய மருத்துவ மனைகள்

'தரம்' உயர்த்தப்படுகிறது

புதுடில்லி, செப். 14—

சுகாதார இலாகாவின் 'தர உயர்வு'க் குழுவின் சிபாரிசுகளுக்கிணங்க, இந்தியாவிலுள்ள 10 சர்க்கார் மருத்துவ மனைகளின் தரங்கள் உயர்த்தப்பட்டு இருக்கின்றன.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் அனாடமி பகுதி, சென்னை சர்க்கார் பெண்கள்—குழந்தைகள் மருத்துவ மனையின் கைனகாலஜி இலாகா, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியின் மேக நோய் பகுதி, வேலூர் ஆபரேஷன் இலாகா ஆகியவைகளின் தரம் உயர்த்தப்படும் என்று தெரிகிறது.

இமயவரம்பன், இலகவதி வாழ்க்கை ஒப்பந்தம்

மரக்காணம், செப். 15—

மரக்காணம் தோழர் என். இமயவரம்பன்—தோழியர் இலகவதி வாழ்க்கை ஒப்பந்தம் 15—9—54 காலை 9 மணிக்கு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மணமக்கள் ஒப்பந்தத்தைப் படித்து உறுதிமொழி கூறினார்கள். மலர் மாலைகள் சூட்டிக்கொள்ளப்பட்டு, தாலி கட்டப்பட்டது. மணமக்களைப்பாராட்டி தோழர்கள் அ. பொன்னம்பலனார், எம். கே. குப்தா வாழ்த்துரை வழங்கினர்.

பின்னர், பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் முடிவுரையாக மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை கூறியதுடன், சுயமரியாதைத் திருமணத்தைப் பற்றியும், அதன் கொள்கைகளை விளக்கியும், பெண்கள்; மண உரிமை—சொத்துரிமை—திருமண ரத்து ஆகியவைகளை பெறவேண்டிய அவசியம் பற்றியும் விளக்கிக் கூறினார்.

மணமக்களுக்கு உறவினர்களாலும், நண்பர்களாலும் வாழ்த்து மடல்களும், பரிசுகளும், அறிவுரை நூல்களும், வெள்ளிச் சாமான்களும் வழங்கப்பட்டன. வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டு, நன்றி கூறலுடன் திருமண நிகழ்ச்சி முடிவுற்றது.

இத்திருமணத்தின சார்பில் மணமக்களால் "நம் நாடு" வளர்ச்சிக்கு ரூ 5/ உதவினார்கள் — பெற்றுக் கொண்டோம் — நன்றியுடையது — வெளியீட்டாளர்.

தென் பகுதி ரெயில்வே மேன் யூனியன் பொன்மலை-திருச்சி கிளை

மேற்படி கிளையின் நிர்வாகக் குழு கூட்டம், யூனியன் அலுவலகத்தில் 14—9—54 மாலை 5-30 மணிக்கு திரு. பொன். பரமசிவம் தலைமையில் நடைபெற்றபோது, 20—9—54 மாலை 6 மணிக்கு திருச்சி டவுன் ஹால் மைதானத்தில், ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், மற்றும் பல முக்கிய முடிவுகளும் செய்யப்பட்டன.

[illegible] அச்சகத்தில் [illegible] வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.